சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 176 20.12.2025 SATURDAY MARGAZHI : 5 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 176 20.12.2025 சனிக்கிழமை மார்கழி : 5 விலை : ரூ.5/-

3 பார்லியில் 100 நாள் வேலைத்திட்டத்திற்கு மாற்றான மசோதா வலுக்கட்டாயமாக நிறைவேற்றம்; ராகுல் குற்றச்சாட்டு

4 திண்டுக்கல் மாவட்டத்தில் 3 லட்சத்து 24 ஆயிரம் (16.80%) வாக்காளர்கள் நீக்கம்

2 ஆட்சியே முடியப்போகுது... வாக்குறுதி நிறைவேற்றாத திமுக அரசு; அண்ணாமலை கண்டனம்

## நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நிறைவு: சபாநாயகர் அளித்த தேநீர் விருந்தில் பிரதமர் மோடி உள்ளிட்டோர் பங்கேற்பு

புதுடெல்லி: டிச.20-

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்றுடன் (டிச., 19) முடிவடைந்த நிலையில், மக்களவை, மாநிலங்களவை ஆகிய இரு அவைகளும் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டன. இதையொட்டி, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அளித்த தேநீர் விருந்தில் பிரதமர் மோடி, காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் டிசம்பர் 1ம் தேதி தொடங்கியது. கூட்டத்தொடர் தொடங்கிய நாள் முதலே எதிர்க்கட்சி எம்.பிக்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், வந்தே மாதரம் விவகாரம், திருப்பரங்குன்றம் சர்ச்சை ஆகியவை குறித்தும் விவாதங்கள் நடைபெற்றன.

குறிப்பாக, 20 ஆண்டுகள் பழமையான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துக்கு மாற்றாக, புதிய ஊரக வேலை உறுதி திட்ட (விபிஜி ராம் ஜி) மசோதா மக்களவையில் நேற்று நிறைவேறியது. இந்த மசோதாவுக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடக்கம் முதல் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. பின்னர், நாட்டில் அணுமின் உற்பத்தியை அதி



கரிக்கும் நோக்கில், அணுசக்தித் துறையை தனியாருக்கு திறந்துவிட மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக 'இந்தியாவின் மாற்றத்துக்கான அணுசக்தி மேம்பாட்டு (சாந்தி) மசோதா நிறைவேற்றப்பட்டது. இதற்கும் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.

இந்த நிலையில், நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்றுடன் நிறைவு பெற்றது. மேலும், மக்களவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் ஓம்.பிர்லா அறிவித்துள்ளார்.

அவை கூடியதும் வந்தே மாதரம் பாடல் இசைக்கப்பட்ட பிறகு அவை ஒத்திவைக்கப்பட்டது. அதேபோல், மாநிலங்களவையிலும் அவை ஒத்தி வைக்கப்படுவதாக மாநிலங்களவை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அறிவித்தார். இதனால் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்றுடன் நிறைவடைந்தது.


இதையொட்டி, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அளித்த தேநீர் விருந்தில் பிரதமர் மோடி, காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி, திமுக எம்.பி.ஆ.ராசா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## சின்னாளபட்டி ஸ்ரீ அஞ்சலி வரத ஆஞ்சநேயருக்கு 1000 லிட்டர் பாலாபிஷேகம்

### தங்க கவச இராஜ அலங்காரத்துடன் அருள் பாலித்தார்

சின்னாளபட்டி, டிச.20

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி மேட்டுப்பட்டி ஸ்ரீ அஞ்சலி வரத ஆஞ்சநேயர் திருக்கோவில். ஒவ்வொரு வருடமும் அனுமன் ஜெயந்தியை முன்னிட்டு சிறப்பு யாகங்கள், மஹா சுதர்சன ஹோமம் மற்றும் சகஸ்ரநாம ஹோமம் நடைபெற்றது.



அதனைத் தொடர்ந்து சுவாமிக்கு ஆயிரம் லிட்டர் பாலைக்கொண்டு சிறப்பு பாலாபிஷேகம் நடைபெற்றது. அஞ்சலி வரத ஆஞ்சநேயருக்கு தங்க கிரீடம் மற்றும் தங்க கவசம் மற்றும் கிரீடம் அணிவித்து சுவாமியின் திருமார்பில் பச்சை கற்பூர திருமாங்கல்யம், கஸ்தூரி திலகம், நாகாபர்ணம், ஒட்டியாணம், உடைவாள், அபய வைகுண்டஹஸ்தம், கல்கித்துராய், தாழம்பூ மாலை, மாருதி மகாலட்சுமி அணிகலன்கள், இந்திர நீலம், மகர கண்டிகை சாலகிராமம் மாலை அணிவித்து வடை மற்றும் ஜிலேபி மாலை அணிவித்து இராஜ அலங்காரம் செய்திருந்தனர். கோவில் தலைமை குருக்கள் சுந்தர்ராஜ பட்டாச்சார்யா கூறுகையில், இந்தியாவிலேயே அனுமனுக்கு கரும்பு காப்பு, பாலமாருதி, தியான மாருதி, செந்தூரக் காப்பு, பச்சைக்காப்பு, வெண்ணை காப்பு, பஞ்சமுக, சுயம்திருமேனி, பழக்காப்பு, சரபோஜி மன்னர், திருப்பதி ஏழுமலையான் அலங்காரம் உட்பட 23 விதமான அலங்காரங்களை செய்யும் ஒரே கோவில் ஆகும். அனுமன் ஜெயந்தி அன்று சுவாமியை தரிசனம் செய்வோருக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும். செல்வம் பெருகும் என்றார்.



■ தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற சிறுபான்மையினர்கள் உரிமைகள் தின விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் 39 பயனாளிகளுக்கு ரூ.3.67 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை, பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.சரவணக்குமார் முன்னிலையில் வழங்கினார்.

## வாக்குச்சாவடி முகவர்கள் தமிழக அரசின் சாதனைகளை வீடு தவறாமல் எடுத்துரைக்க வேண்டும் : ஐ.பி. செந்தில்குமார் பேச்சு

சின்னாளபட்டி, டிச.18

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் கிழக்கு ஒன்றியம், சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சி;க்குட்பட்ட 6வது வார்டு வாக்குசாவடி முகவர்களான பி.எல்.ஏ.2, பி.எல்.சி, பி.எல்.டி. மற்றும் கிளைக் கழக நிர்வாகிகளுக்கான என்வாக்கு சாவடி வெற்றி வாக்குச்சாவடி, தமிழ்நாட்டை தலை குனியவிடமாட்டோம் என்ற தலைப்பில் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் சாத்தாகோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசசன் தலைமை தாங்கினார். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, சின்னாளபட்டி பேரூர் கழக திமுக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் அவர்கள் கலந்துகொண்டு வாக்குசாவடி முகவர்கள் மத்தியில் பேசும்போது




வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் முக்கிய பங்கு உங்களுக்கு உள்ளது. வாக்காளர்களை வாக்குச் சாவடிக்கு அழைத்து வருவது முதற்கொண்டு வாக்கு பதிவு செய்யும்வரை உங்கள் பணி முக்கியமானது. நீங்கள் நாளை முதல் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று ஒவ்வொரு குடும்பமாக சந்தித்து அப்பகுதியில் உள்ள குறைகளை கேட்டறிந்து அதை குறிப்பெடுத்து அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும். இது தவிர தமிழக அரசின் சாதனைத் திட்டங்கள் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்து உங்களிடம் வழங்கப்பட்ட துண்டு பிரசுரங்களை வீடு தவறாமல் கொண்டு சேர்க்க வேண்டும். வருகின்ற 5 மாதங்கள் நீங்கள் அயராது உழைத்தால் 5 வருடங்கள் உங்களுக்கு பலன்கள் கிடைக்கும் என்றார். குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஆத்தூர் தொகுதியில் ஒரு ரூபாய் கூட வாங்காமல் வழங்கப்பட்ட அரசு பணிகள், விளையாட்டு துறையில் சாதனை படைத்த மாணவர்களுக்கு தமிழக அரசு வழங்கிய 3 சதவீத இட ஒதுக்கீடு, மகளிருக்கு வழங்கப்பட்ட சாதனைத் திட்டங்கள் குறித்து நீங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் எடுத்துரைத்தால் போதும் உங்கள் பகுதியில் அதிக ஓட்டுக்களை நமது கழகத்திற்கு பெற்றுத்தர முடியும் என்றார். கூட்டத்தில் சின்னாளபட்டி பேரூர் கழக முன்னாள் செயலாளர் அறிவழகன், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத் தலைவர் ஆனந்தி பாரதிராஜா, 6வது வார்டு உறுப்பினர் செல்வகுமாரி, வார்டு செயலாளர் நவனீதன், பேரூர் கழக திமுக பொறுப்பாளர்கள் ஆர்.ஏ.கிருஷ்ணன், நாககண்ணன், தம்பித்துரை, கீர்த்தனா, முத்துவேல், மெடிக்கல் கோபி, வேல்முருகன், குணசேகரன், பேரூர் இளைஞரணி அமைப்பாளர் வினோத் ஒச்சப்பன், வாக்குச்சாவடி முகவர் ஆண்டவர், இளைஞரணி துணை அமைப்பாளர் ரவிச்சந்திரன், திமுக நிர்வாகி நம்பர் ஒன் மணிகண்டன், உட்பட திமுகவினர் பலர் கலந்துகொண்டனர்.

## காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் ந.பஞ்சநதம் தலைமையில் தேசிய கல்வி தின விழா

சின்னாளபட்டி, டிச.18

திண்டுக்கல் மாவட்டம் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறை சார்பில் தேசிய கல்வி தின விழா பல்கலைக்கழக வெள்ளி விழா அரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு துணைவேந்தர் பேராசிரியர் என். பஞ்சநதம் அவர்கள் தலைமை தாங்கினார். கல்வியியல் துறையின் தலைவரும் பேராசிரியருமான முனைவர் பி.எஸ். ஸ்ரீதேவி அவர்கள் வரவேற்று பேசினார்.



விழாவில் தலைமையுரையாற்றிய புதுதில்லி தேசிய ஆசிரியர் கல்வி குழுமத்தின் உறுப்பினர் முனைவர் எஸ்.மணி அவர்கள் பேசுகையில், இந்தியாவின் முதல் கல்வி அமைச்சரான "மௌலானா அபுல் கலாம் ஆசாத் இந்தியாவில் தேசிய அளவில் தரமான கல்வி முறையை உருவாக்கப் பாடுபட்டார். அனைவருக்கும் இலவச ஆரம்பக் கல்வி கிடைக்கவும், இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் ஐ.ஐ.டி. நிறுவுவதற்கும், பல்கலைக்கழக மானியக் குழு அமைவதற்கும் அவர் பாடுபட்டார்" என்றார். கல்வியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ஆர் பக்தவத்சலபெருமாள் அவர்கள் நிகழ்ச்சியின் கருப்பொருள் குறித்து விளக்கவுரை ஆற்றினார்.

விழாவில் கல்வித்துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் பி. பொன்னுசாமி அவர்கள் எழுதிய நூல் வெளியிடப்பட்டது. விழாவின் முக்கிய நிகழ்வாக, பல்வேறு தனியார் பள்ளிகளைச் சேர்ந்த தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்வேறு கல்வியியல் நிறுவனங்களைச் சேர்ந்த உதவிப் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் என சுமார் 50 கல்வியாளர்கள்களின் சிறப்புமிகு கல்விப் பணியை போற்றும் வகையில் சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிறைவாக, விழா ஒருங்கிணைப்பாளரும் கல்வித் துறையின் இணைப் பேராசிரியருமான முனைவர் என். தேவகி அவர்கள் நன்றி கூற விழா நிறைவு பெற்றது.

# கோரிக்கைகளுக்காக போராடிய நர்ஸ்களை கைது செய்வதா? இபிஎஸ் கண்டனம்



சென்னை, டிச.20.- மீண்டும் பணி உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராடி கைது செய்யப்பட்ட நர்ஸ்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் வலியுறுத்தி உள்ளார்.

அவரது அறிக்கை: திமுக அரசு, 2021ம் ஆண்டு சட்டசபை பொதுத் தேர்தலின்போது நர்ஸ்களுக்கு அளித்த வாக்குறுதி எண் 356ஐ நிறைவேற்றக்கோரியும், கொரோனா காலகட்டத்தில் பணியமர்த்தப்பட்டு, திமுக அரசால் பணிநீக்கம் செய்யபட்ட அனைத்து நர்ஸ்களுக்கும் மீண்டும் பணி வழங்க வேண்டும் உள்ளிட்ட பல வாக்குறுதிகளை நிறைவேற்றக்கோரி பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

நேற்று தமிழக நர்ஸ்கள் மேம்பாடு சங்கத்தின் சார்பாக அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி சென்னை சிவானாந்தா சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் தமிழகம் முழுவதும் இருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான நர்ஸ்கள் கலந்து கொண்டனர்.

நேற்று இரவு 7.30 மணிக்கு போலீசார் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த சுமார் 1000க்கும் மேற்பட்ட நர்ஸ்களை கைது செய்து அவர்களை பஸ்கள் மூலமாக அழைத்துச் சென்று கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் இறக்கிவிட்டனர். இறக்கிவிடப்பட்ட நர்ஸ்கள், கிளாம்பாக்கம் பஸ் நிலையத்திலேயே தங்களது கோரிக்கைகள் நிறைவேறாமல் கலையமாட்டோம் எனக் கூறி, திமுக அரசுக்கு எதிரான கோஷங்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டதை தொடர்ந்து, திமுக அரசின் காவல்துறை அவர்களை மீண்டும் கைது செய்து அருகிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில் அடைத்து வைத்துள்ளனர்.

2021ம் ஆண்டு சட்டசபை தேர்தலின் போது அளித்த வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி கடந்த நான்கரை ஆண்டுகளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நர்ஸ்களை உடனடியாக விடுவிப்பதுடன், 2021ம் ஆண்டு சட்டசபை பொதுத் தேர்தலின்போது திமுக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற திமுக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு இபிஎஸ் கூறியுள்ளார்.

# ஆட்சியே முடியப்போகுது... வாக்குறுதி நிறைவேற்றாத திமுக அரசு; அண்ணாமலை கண்டனம்



சென்னை, டிச.20- ஆட்சிக்கு வந்து ஐந்தாவது ஆண்டு முடியப் போகும் நேரத்திலும், செவிலியர்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பாஜ மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.

அவரது அறிக்கை; பணி நிரந்தரம் கோரி, சென்னை சிவானந்தம் சாலையில் போராட்டம் நடத்திய 1,500 க்கும் மேற்பட்ட செவிலியர்களை, மாலையில் கைது செய்து, நள்ளிரவில் கிளாம்பாக்கம் பஸ்ஸ்டாண்டில் கொண்டு போய் விட்டிருக்கிறது திமுக அரசு. இதனால், அதிகாலை நான்கு மணி வரை, கிளாம்பாக்கம் பஸ்ஸ்டாண்டில், செவிலியர்கள் தங்கள் போராட்டத்தைத் தொடர்ந்திருக்கிறார்கள். திமுக அரசின் இந்த அராஜகப் போக்கினை வன்மையாகக் கண்டிக்கிறேன். திமுக தனது தேர்தல் அறிக்கை வாக்குறுதி எண் 356 ல், தமிழகம் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் பணி புரியும் மருத்துவர்களும், செவிலியர்களும், பணி நிரந்தரம் செய்யப்படுவர் என்று கூறியிருந்தது. ஆனால், ஆட்சிக்கு வந்து ஐந்தாவது ஆண்டு முடியப் போகும் நேரத்திலும், இந்த வாக்குறுதியை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கொரோனா பெருந்தொற்று காலத்தில், தங்கள் உயிரைக் குறித்துக் கூடக் கவலைப்படாமல், பொதுமக்கள் நலனுக்காக முன்னின்று பணியாற்றியவர்கள் மருத்துவர்களும், செவிலியர்களும். நான்கரை ஆண்டுகளாக, தங்களைப் பணி நிரந்தரம் செய்ய, அவர்கள் கோரிக்கை வைக்காத இடமே இல்லை. ஆனால், திமுக அரசு, அவர்களைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறது. செவிலியர்கள் கேட்பது, ஆட்சிக்கு வருவதற்காக திமுக கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத்தான். அவர்களை தலைமைச்செயலகத்தில் சந்தித்து, அவர்கள் கோரிக்கைகளை கேட்டுக்கொள்ளும் அடிப்படை மரியாதையைக் கூட, சுகாதாரத்துறை அமைச்சர் கொடுக்க மறுக்கிறார் என்பது, பொதுமக்களை திமுக எப்படி நடத்துகிறது என்பதற்கு உதாரணம்.

கடந்த 2023ம் ஆண்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 2,472 செவிலியர்களைப் பணிநீக்கம் செய்ததை நாம் கண்டித்துக் குரல் கொடுத்திருந்தோம். தமிழகம் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் செவிலியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற செவிலியர்களின் கோரிக்கைக்கு எப்போதும் துணை நிற்போம். செவிலியர்களுக்குக் கொடுத்த தேர்தல் வாக்குறுதியை திமுக நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# சென்னையில் பிட்புல், ராட்வீலர் நாய் வளர்த்தால் ரூ.1 லட்சம் அபராதம்



சென்னை, டிச.20- பிட்புல் மற்றும் ராட்வீலர் ரக நாய் வளர்த்தால் ரூ.1 லட்சம் அபராதம் விதிக்க வழிவகை செய்யும் தீர்மானம் சென்னை மாநகராட்சி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

மேயர் பிரியா தலைமையில் சென்னை மாநகராட்சி கூட்டம் இன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ரூ.25.95 கோடி செலவில் சென்னையில் 200 வார்டுகளில் தூய்மை பணியாளர்களுக்கு கழிப்பறையுடன் கூடிய ஓய்வறை அமைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதேபோல, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் வசிப்போர்கள் பிட்புல், ராட்வீலர் வகை நாய்களை வளர்த்தால் ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. ஏற்கனவே, இந்த இரு இன நாய்களை வளர்க்க தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது தடையை மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இந்த நாய் இனங்கள், உரிமையாளரின் கட்டுப்பாட்டை மீறி ஆக்ரோஷமாக செயல்படுவதாகவும், ரோட்டில் செல்வோரை கடித்துக் குதறுவதாகவும் புகார் எழுந்ததை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

# போர்க்கொடி உயர்த்திய அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள்: டிசம்பர் 22ல் பேச்சு நடத்த தமிழக அரசு அழைப்பு




சென்னை, டிச.20- தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி சட்டசபை தேர்தலுக்கு முன்னதாக, போராட்டங்களை தீவிர படுத்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் முடிவு செய்துள்ளனர். பிரச்னை பூதாகரம் ஆகாமல் தடுக்கும் நோக்கத்துடன் டிசம்பர் 22ல் பேச்சுவார்த்தைக்கு தமிழக அரசு அழைப்பு விடுத்துள்ளது.

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளுக்கு தீர்வு காண்பதாக, 2021 சட்டசபை தேர்தலுக்கு முன்னதாக திமுக வாக்குறுதி அளித்து இருந்தது. பழைய பென்ஷன் திட்டத்தையும் அமல் செய்வதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆட்சிக்கு வந்ததும் அந்த கோரிக்கைகளில் பலவற்றை நிறைவேற்றவில்லை. இதனால் அதிருப்தி அடைந்த அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கத்தினர், தொடர் போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.


தேர்தலுக்கு முன்னதாக தங்களது போராட்டங்களை தீவிர படுத்தவும் திட்டமிட்டுள்ளனர். அவர்களை சமாதானம் செய்யும் வகையில், அவ்வப்போது தமிழக அரசு பேச்சு நடத்துவது வாடிக்கையாக இருந்து வருகிறது. அந்த வகையில் வரும் 22ம் தேதி பேச்சுவார்த்தைக்கு வரும்படி அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்களுக்கு தமிழக அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து வரும் டிசம்பர் 22ம் தேதி காலை 10 மணிக்கு சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள 10வது தளத்தில் உள்ள ஆலோசனைக் கூடத்தில் தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் சங்க நிர்வாகிகளுடன் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மகேஷ் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது

# ஏஐ நமக்கு முதலாளியா?ஏஐயின் இன்னொரு முகம்

சென்னை, டிச.20-

செயற்கை நுண்ணறிவு (ஏஐ) சேவைகளைத் திறம்படப் பயன் படுத்துவதற்கான வழிமுறைகளில் ஒன்றாக 30 சதவீத விதிமுறை எனும் வழி முன்வைக்கப்படுவது தெரியுமா? மீண்டும்மீண்டும் ஒரே மாதிரி அமையக்கூடிய பணிகளில் 70 சதவீதச் செயல்களை ஏஐ வசம் ஒப்படைத்துவிட்டு, எஞ்சிய 30 சதவீதப் பணியை மனிதர்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதே இந்த விதி.



இந்த விதியை ஏஐ பயன்பாட்டுக்கான பொன்விதியாக அப்படியே ஏற்றுக்கொண்டுவிட முடியாது என்றாலும், ஒரே மாதிரியான வேலைகளை ஏஐ வசம் தயக்கம் இல்லாமல் ஒப்படைக்கலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதை இன்னும் எளிதாகச் சொல்ல வேண்டும் என்றால், அலுப்பூட்டக்கூடிய வேலைகளை எல்லாம் ஏஐ சேவைகளிடம் விட்டுவிடலாம் எனப் புரிந்துகொள்ளலாம். உண்மையிலேயே இது நடைமுறையில் அதிகப் பலன் தரக்கூடியது. ஏன், ஏஐ சேவைகளுக்கு அலுப்பே ஏற்படாதா எனக் கேட்கலாம். ஏஐ சேவைகளின் பலமே அதுதான்.

மனிதர்கள் போல அவை அலுப்புக் கொள்ளாது, களைப்பும் அடையாது. உதாரணமாக, ஆயிரக்கணக்கான சர்வே முடிவுகள் அடங்கிய பெரிய எக்ஸல் கோப்பை கொடுத்து, இதில் உள்ள பயனுள்ள அம்சங்களைச் சுட்டிக்காட்டவும் எனக் கேட்டால், இத்தனை பெரிய கோப்பா என்றெல்லாம் முகம் சுளிக்காமல் அடுத்த சில நொடிகளில், அதன் சாராம்சத்தைப் பட்டியல் போட்டுக் கொடுத்துவிடும்.

# திருச்சியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் தற்கொலை

திருச்சி, டிச.20-

திருச்சியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலுக்குச் சொந்தமான யாத்திரி நிவாஸில் திருவையாறைச் சேர்ந்த தம்பதி, தங்களின் இரு பெண் குழந்தைகளுடன், கடந்த டிசம்பர் 10ம் தேதி அறை எடுத்து தங்கியுள்ளனர். நீண்ட நாட்களாக அவர்கள் தங்கியிருந்த அறையின் கதவு திறக்கப்படாத நிலையில், திடீரென துர்நாற்றம் வீசியுள்ளது. இதனால், சந்தேகமடைந்த விடுதி ஊழியர்கள் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர்.

அதன்பேரில், விரைந்து வந்த போலீசார், அறையின் கதவை திறந்து பார்த்தபோது அதிர்ச்சி காத்திருந்தது. பூச்சி மருந்து குடித்து இருமகள்களுடன் பெற்றோர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். மனநலம் பாதிக்கப்பட்ட இரு மகள்களை கவனித்துக் கொள்ள ஆள் இல்லாததால், இந்த விபரீத முடிவை எடுத்தாக கடிதமும் எழுதி வைத்துள்ளனர்.

பின்னர், 4 பேரின் சடலங்களையும் மீட்ட போலீசார், இந்த சம்பவம் குறித்து விசாரித்து வருகின்றனர். திருச்சியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# தேர்தல் கூட்டணி தொடர்பாக நிர்மலாவுடன் வேலுமணி சந்திப்பு

சென்னை, டிச.20- தேர்தல் கூட்டணி தொடர்பாக அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர்கள் நேற்று டில்லியில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்தனர்.

அ.தி.மு.க., பா.ஜ., கூட்ட ணியில் மேலும் கட்சிகளை சேர்த்து கூட்டணியை வலுவாக்க வேண்டும் என்பதற்காக, இரு தரப்பிலும் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த வாரம், அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமியை, தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன் சந்தித்து பேசினார்.


நிர்மலா சீதாராமன் வேலுமணி

அதன் பின் அவர் டில்லி சென்று, மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, நிர்மலா சீதாராமன் ஆகியோரை சந்தித்து, பழனி சாமியை சந்தித்து பேசிய விபரங்களை தெரிவித்தார்.அவர்கள் சில ஆலோசனைகளை வழங்கினர். அதன் பின் அவர் சென்னை திரும்பினார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று, அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர்கள் வேலுமணி, சண்முகம் ஆகியோர் டில்லி சென்று, நிர்மலா சீதாராமனை சந்தித்து பேசினர். அப்போது, கூட்டணி தொடர்பாக ஆலோசித்ததாக கூறப்படுகிறது.



# எரிந்து சாம்பலான ஆவணங்கள் மதுரை எல்ஐசி அலுவலக தீ விபத்துக்கு காரணம் என்ன?

மதுரை, டிச.20- மதுரை மேலவெளி வீதி எல்ஐசி அலுவலகத்தில் நேற்று இரவு நடந்த தீ விபத்தில் முதுநிலை மேலாளர் இறந்ததுடன், ஏராளமான கடன், பாலிஸி பத்திரங்கள் எரிந்துள்ளன. இந்த விபத்துக்கான காரணங்கள் குறித்த விவரம் தற்போது வெளியாகியுள்ளது.

மதுரை மேலவெளி வீதியில் ரயில் நிலையம் எதிரிலுள்ள எல்ஐசி கட்டிடத்தின் 2 வது தளத்தில் எல்ஐசி யூனிட் 1 அலுவலகம் செயல்படுகிறது. இந்த அலுவலகத்தில் 50க்கும் மேற்பட்டோர் பணிபுரிந்து வருகின்றனர். சிலர் இரவு வரை பணிபுரிந்துவிட்டு தாமதமாக செல்வது வழக்கம்.

நேற்று இரவு 9 மணி அளவில் வழக்கம்போல் ஊழியர்கள் சிலர் பணிபுரிந்து கொண்டிருந்தனர். அப்போது அலுவலகத்தில் திடீரென தீ பற்றியது. தொடர்ந்து மளமளவென பரவிய தீ, கட்டிடத்தின் பிற பகுதிகளுக்கும் பரவியது. இதனால் பதற்றமடைந்த ஊழியர்கள் ஓடி தப்பினர். சிலர் கட்டிடத்துக்குள் சிக்கிக் கொண்டனர்.

தகவல் அறிந்த தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று, கட்டிடத்தில் சிக்கிய ஊழியர்களை மீட்டனர். அதன்பிறகு தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் இக்கட்டிடத்தின் தனியறையில் சிக்கிய முதுநிலை மேலாளர் கல்யாணி நம்பி (55) தீயில் கருகி உயிரிந்தார். நெல்லையைச் சேர்ந்த இவர், மதுரை வானொலி நிலைய அறிவிப்பாளர் அழகியநம்பியின் மனைவி ஆவார்.

தீ விபத்தில் மேலாளர் அறை உள்ளிட்ட பக்கத்து அலுவலக அறையிலுள்ள காப்பீட்டு திட்டம் தொடர்பான சில ஆவணங்கள், கணினி உள்ளிட்ட மின் சாதனங்களும் எரிந்து நாசமாகியதாக போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது.

மேலாளர் அறையில் இருந்து ஏசி மிஷினில் ஏற்பட்ட மின்கசிவால் தீ விபத்து நேரிட்டது என முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. ஆனாலும், தீவிபத்துக்கு வேறு காரணங்கள் இருக்கலாமா என்பது குறித்து தீயணைப்பு, காவல் துறையினர் அடங்கிய நிபுணர் குழுவினர் விசாரிக்கின்றனர்.

தீ விபத்து நடந்த கட்டிடத்தை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், ஆட்சியர் பிரவீன்குமார் உள்ளிட்ட அதிகாரிகள் இன்று ஆய்வு செய்தனர்.

உயிரிழந்தவர் அணிந்திருந்த நகை மாயம்: போலீஸார் கூறுகையில், "எல்ஐசி கட்டிட தீவிபத்தில் உயிரிழந்த பெண் மேலாளர் கல்யாணி நம்பி கழுத்தில் சுமார் 15 பவுன் நகை அணிந்து இருந்ததாக கூறப்படுகிறது.

விபத்தில் சிக்கி அவரை மீட்கப்பட்ட அறையில் அவரது கழுத்தில் நகை எதுவும் இல்லை. நகை எதுவும் அணிந்து இருந்தாரா என்று தேடியபோதும் கிடைக்கவில்லை. ஒருவேளை தீயில் உருகி சேதமடைந்து இருக்கலாம் என்ற கோணத்திலும், யாரும் எடுத்துச் சென்றார்களா என்ற அடிப்படையிலும் விசாரிக்கிறோம்" என்றனர்.

# தரம் உயர்த்தப்பட்ட அரசு பள்ளிகள்; சம்பளமின்றி தவிக்கும் ஆசிரியர்கள்; 5 மாதங்களாக 'விடியல்' கிடைக்கவில்லை



மதுரை, டிச.20- தமிழகத்தில் தரம் உயர்த்தப்பட்ட அரசு பள்ளிகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு 5 மாதங்களாக சம்பளம் கிடைக்கவில்லை.

மாநிலத்தில் 14 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலையாக ஜூலையில் தரம் உயர்த்தப்பட்டன. இப்பள்ளிகள் ஆகஸ்ட் முதல் செயல்படுகின்றன. இங்கு தலா ஒரு தலைமையாசிரியர், பாடம் வாரியாக தலா 5 ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டன. அந்த இடங்களில் பணிமாறுதல், பதவி உயர்வு மூலம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு 5 மாதங்களாக சம்பளம் வழங்குவதில் தொழில்நுட்ப ரீதியான சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் ஆசிரியர்கள் பொருளாதார ரீதியாக பாதித்து மனஉளைச்சலில் தவிக்கின்றனர்.

இது குறித்து ஆசிரியர்கள் கூறியதாவது: அரசு ஊழியர்களுக்கான சம்பளம் விவரம் ஐ.எப்.எச்.ஆர்.எம்.எஸ்., என்ற 'அரசின் நிதி, மனிதவள மேலாண்மைக்கான ஒருங்கிணைந்த சாப்ட்வேர்'ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் உருவாக்கப்பட்ட பணியிடங்கள் விவரம் இந்த சாப்ட்வேரில் பதிவேற்றம் செய்யப்பட்ட நிலையில், சம்பளம் அனுமதி கிடைப்பதில்லை. இது தொழில்நுட்பம் சார்ந்த பிரச்னையாகவும், சாப்ட்வேர் பதிவேற்றம் செய்யாமலும் உள்ளது. இதனால் புதிய பணியிடங்கள் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்க முடியவில்லை.

இப்பிரச்னை குறித்து கல்வி அதிகாரிகள் கவனத்திற்கு ஆகஸ்ட்டில்ஆசிரியர்கள் கொண்டுசென்றும் இன்னும் தீர்வு கிடைக்கவில்லை. ஆசிரியர் சார்ந்த பிரச்னைகளுக்கும் முடிவு தெரிவதில்லை. சம்பந்தப்பட்ட 'சாப்ட்வேரை' பராமரிப்போரின் அலட்சியத்தால் இதுபோன்ற சிக்கல் நீடிக்கிறது. இதனால் ஆசிரியர்கள் குடும்ப ரீதியாக பாதிக்கப்படுகின்றனர். இயக்குநர் இவ்விஷயத்தில் இனிமேலாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்

# சீன ஜி.பி.எஸ்., கருவியுடன் கர்நாடக கடற்கரையில் பிடிபட்டது பறவை




கார்வார், டிச.20-

கர்நாடகாவில், ஐ.என்.எஸ்., கடம்பா கடற்படை தளத்துக்கு அருகே, சீன தயாரிப்பு ஜி.பி.எஸ்., எனப்படும் வழிகாட்டி 'சில்' உடன் தென்பட்ட, 'சீகல்' என்றழைக்கப்படும் கடல் புறாவை, அப்பகுதியினர் கைப்பற்றி வனத்துறையிடம் ஒப்படைத்தனர்.

கர்நாடகாவின் உத்தர கன்னடா மாவட்டம் கார்வார் கடற்கரை பகுதியில், நம் கடற்படையின் முக்கியத்துவம் வாய்ந்த ஐ.என்.எஸ்., கடம்பா தளம் உள்ளது. இதன் அருகே உள்ள திம்மக்கா பகுதியில் தனிநபருக்கு சொந்தமான தோட்டத்தில், உடலில் வித்தியாசமான கருவியுடன் கடல்புறா அமர்ந்திருந்ததை அப்பகுதியினர் நேற்று முன்தினம் கண்டனர்.

சந்தேகமடைந்த அவர்கள் வனத்துறையின் கடல் பிரிவுக்கு தகவல் தெரிவித்தனர். வனத்துறை அதிகாரிகள், போலீசாருடன் சம்பவ இடத்துக்கு சென்று பறவையை பாதுகாப்பாக பிடித்து ஆய்வு செய்தனர்.

கருவியில் சீன அறிவியல் அகாடமியின் சுற்றுச்சூழல் ஆய்வு மையத்தின் குறியீடுகள் இருந்தது, முதற்கட்ட விசாரணையில் தெரிந்தது.

இது குறித்து போலீசார் கூறுகையில், 'பறவைகளின் இடப்பெயர்வு, உணவுப் பழக்கம் மற்றும் பயண வழித்தடங்களை ஆய்வு செய்வதற்காக, இந்த ஜி.பி.எஸ்., கருவி பொருத்தப்பட்டு இருக்கலாம்.

'இந்த பறவை ஆர்க்டிக் பகுதிகளை கடந்து 10,000 கி.மீ.,க்கும் மேல் பயணித்து வந்திருக்கலாம் என, நிபுணர்கள் கருதுகின்றனர். என்ன தரவுகளை கருவி அனுப்பியுள்ளது என்பதை கண்டறியும் சோதனை நடத்தவும் திட்டமிட்டுள்ளோம்' என்றனர்.

கர்நாடகாவின் கார்வார் கடற்கரை பகுதியில், கடந்த ஆண்டு நவம்பரிலும் இதே போன்று ஜி.பி.எஸ்., கருவியுடன் கழுகு ஒன்று பிடிபட்டது. விசாரணையில், அது வன உயிரின ஆய்வுக்காக அனுப்பப்பட்டது தெரிந்தது.

# பார்லியில் 100 நாள் வேலைத்திட்டத்திற்கு மாற்றான மசோதா வலுக்கட்டாயமாக நிறைவேற்றம்; ராகுல் குற்றச்சாட்டு

புதுடில்லி. டிச.20-

பார்லியில் 100 நாள் வேலைத்திட்டம் தொடர்பான ஜி ராம் ஜி மசோதா வலுக்கட்டாயமாக நிறைவேற்றப்பட்டது என காங்கிரஸ் எம்பியும், லோக்சபா எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் குற்றம் சாட்டியுள்ளார்.

மஹாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்திற்கு மாற்றாக கொண்டு வரப்பட்ட, 'விபி ஜி ராம் ஜி' மசோதா, எதிர்க்கட்சிகளின் கடும் அமளிக்கு மத்தியில் லோக்சபாவில் நிறைவேற்றப்பட்டது. இது குறித்து ராகுல் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கை:

நேற்று இரவு, பாஜ அரசு இருபது ஆண்டுகால மஹாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை ஒரே நாளில் தகர்த்துவிட்டது. 'விபி ஜி ராம் ஜி' மசோதா மறுசீரமைப்பு அல்ல. அது உரிமைகள் அடிப்படையில் வழங்கப்படும் உத்தரவாதத்தை அழித்து, டில்லியில் இருந்து கட்டுப்படுத்தப்படும் ஒரு திட்டமாக மாற்றுகிறது.



கிராமப்புறத் தொழிலாளிக்கு பேரம் பேசும் சக்தியை வழங்கியது. அந்த திட்டத்தில் பயன் அடைந்தவர்களின் ஊதியங்கள் அதிகரித்தன. கிராமப்புற உள்கட்டமைப்பும் உருவாக்கப்பட்டு புத்துயிர் பெற்றது. அந்தச் செல்வாக்கைத்தான் இந்த அரசு தற்போது உடைக்க விரும்புகிறது.

100நாள் வேலைத்திட்டம் பொருளாதாரம் முடங்கி, வாழ்வாதாரங்கள் சரிந்தபோது, கோடிக்கணக்கான மக்கள் பசி மற்றும் கடனில் மூழ்குவதிலிருந்து அது தடுத்தது. இது பெண்களுக்குத்தான் அதிகம் உதவியது.

தற்போது புதிய சட்டத்தின் கீழ், பெண்களும், தலித்துகளும், பழங்குடியினரும், நிலமற்ற தொழிலாளர்களும், மிகவும் ஏழ்மையான இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரும்தான் முதலில் வெளியேற்றப்படுகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தச் சட்டம் பார்லிமென்டில் வலுக்கட்டாயமாக நிறைவேற்றப்பட்டது.

மசோதாவை நிலைக்குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. கோடிக்கணக்கான தொழிலாளர்களைப் பாதிக்கும் ஒரு சட்டம், ஆய்வு, நிபுணர் ஆலோசனை மற்றும் பொது மக்கள் கருத்து கேட்பு இல்லாமல் ஒருபோதும் திணிக்கப்பட்டிருக்கக் கூடாது. தொழிலாளர்களைப் பலவீனப்படுத்துவது, கிராமப்புற இந்தியாவின், குறிப்பாக தலித்துகள், இதர பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் செல்வாக்கைப் பலவீனப்படுத்துவது, அதிகாரத்தை தன்வசப்படுத்தி கொள்வது பாஜவின் இலக்குகள். இந்த அரசாங்கம் அழிக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம். இந்த நடவடிக்கையைத் தோற்கடிக்கவும், இந்தச் சட்டம் திரும்பப் பெறப்படுவதை உறுதி செய்யவும், தொழிலாளர்கள், பஞ்சாயத்துகள் மற்றும் மாநிலங்களுடன் நாங்கள் துணை நிற்போம். இவ்வாறு ராகுல் கூறியுள்ளார்



# கட்சிப் பொதுக் கூட்டங்கள், ரோடு ஷோக்களுக்கான இறுதி வழிகாட்டு நெறிமுறைகள்: ஜன.5க்குள் வெளியிட அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை, டிச.20-

தமிழகத்தில் அரசியல் கட்சிகளின் பொதுக் கூட்டங்கள் மற்றும் ரோடு ஷோ-க்கள் தொடர்பான இறுதி வழிகாட்டு நெறிமுறைகளை ஜனவரி 5ம் தேதிக்குள் வெளியிட வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரூரில், கடந்த செப்டம்பர் 27ம் தேதி, தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, 41 பேர் பலியாகினர். இந்த சம்பவத்தை தொடர்ந்து, தமிழகத்தில் அரசியல் கட்சி தலைவர்களின் ரோடு ஷோ நிகழ்ச்சிகளுக்கும், பொதுக்கூட்டங்களுக்கும் வழிகாட்டு விதிமுறைகள் வகுக்கக் கோரி, தவெக அதிமுக மற்றும் தேசிய மக்கள் சக்தி கட்சிகளும், மதுரையைச் சேர்ந்த திருக்குமரன், பிரகாஷ் உள்ளிட்ட தனிநபர்களும் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்குகளை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகளை விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், 23 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள், 40க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் கருத்துகளைப் பெற்று, பொதுக்கூட்டங்கள், ரோடு ஷோக்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து, நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது தமிழக அரசு.

இந்த வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து அதிமுக, தவெக மற்றும் தேசிய மக்கள் சக்திக் கட்சி சார்பில் ஆலோசனைகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அரசியல் கட்சிகளின் ஆலோசனைகள் பரிசீலிக்கப்படும் என, அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வழக்கில் விசாரணை முடிவடைந்ததைத் தொடர்ந்து, தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்திருந்தது, தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு, இன்று தீர்ப்பளித்தது.

வழக்கில் இன்று தீர்ப்பளித்த தலைமை நீதிபதி அமர்வு, ரோடு ஷோக்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்திருந்த கட்சிகள் சார்பில் ஏராளமான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியது.

இந்த ஆலோசனைகளை பரிசீலித்து, ஜனவரி 5 ம் தேதிக்குள் வழிகாட்டு நெறிமுறைகளை அறிவிக்க வேண்டும் என தமிழக அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அதன்பின், வழிகாட்டு நெறிமுறைகளில் ஏதேனும் ஆட்சேபங்கள் இருந்தால், அதுசம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்யலாம் எனவும் நீதிபதிகள் தங்கள் உத்தரவில் சுட்டிக்காட்டியுள்ளனர்




# "திமுக ஆட்சியில் இந்துக்களின் உணர்வுகள் தொடர்ந்து புண்படுத்தப்படுகின்றன" தமிழிசை சவுந்திரராஜன்

கோவை, டிச.20-

"திமுக ஆட்சியில் இந்துக்களின் உணர்வுகள் தொடர்ந்து புண்படுத்தப்படுகின்றன. திருப்பரங்குன்றம் விவகாரத்தில் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், அதற்கு ஸ்டாலின் அரசு கண்டிப்பாக பதில் சொல்லியே ஆக வேண்டும்," என தமிழிசை சவுந்திரராஜன் தெரிவித்துள்ளார்.

பாஜக சார்பில் கோவை மாவட்டம் எட்டிமடை பகுதியில் நடைபெறும் மகளிர் அணி பயிற்சி முகாமில் மூத்த தலைவர் தமிழிசை சவுந்திரராஜன் இன்று கலந்து கொண்டார். முன்னதாக இன்று காலை கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: "கோவை, திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட பகுதிகள் குறித்து பாஜக வுக்கு நன்றாகத் தெரியும். மஞ்சளுக்கு தனி வாரியம் அமைத்ததே பாஜக தான். பாஜக, அதிமுக கூட்டணி தற்போது மிகவும் வலுவாக உள்ளது. திமுக ஆட்சியில் மக்களின் குரல்வளை நெரிக்கப்பட்டு வருகிறது.

திருப்பரங்குன்றம் விவகாரத்தில் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், அதற்கு ஸ்டாலின் அரசு கண்டிப்பாக பதில் சொல்லியே ஆக வேண்டும். அந்த விவகாரத்தில் நீதிபதியின் மீதே குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்துக்களின் உணர்வுகள் தொடர்ந்து புண்படுத்தப்படுகின்றன. இதற்கான பதில் 2026 ம் ஆண்டு தேர்தலில் நிச்சயம் கிடைக்கும்.

திமுக எதிர்ப்பு தொடர்பான தவெக தலைவர் விஜய் நிலைப்பாடு வரவேற்கத்தக்கது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் அதிக ஊழல் நடைபெற்ற மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாக உள்ளது. திமுக அரசு எத்தனை திட்டங்களுக்கு காந்தி பெயரை வைத்துள்ளது.

2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும். திமுக ஒரு தீய சக்தி என்பதில் மாற்றுக் கருத்தே இல்லை. விஜய்க்கும் அவ்வாறு சொல்ல வேண்டிய நிலை வந்துள்ளது" என்று தமிழிசை சவுந்திரராஜன் தெரிவித்தார்

# விஜயவாடா டூ விசாகப்பட்டினம் ஏர் இந்தியா விமானம் தொழில்நுட்ப கோளாறால் ரத்து; பயணிகள் கடும் அவதி

அமராவதிஇ டிச.20-

விஜயவாடா அருகே உள்ள கன்னவரம் விமான நிலையத்தில் இருந்து விசாகப்பட்டினம் செல்லவிருந்த ஏர் இந்தியா விமானம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக திடீரென ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் கடும் அவதி அடைந்தனர்.



ஆந்திரா மாநிலம் விஜயவாடா அருகே உள்ள கன்னவரம் விமான நிலையத்தில் இருந்து விசாகப்பட்டினத்திற்கு நேற்றிரவு 9 மணிக்கு ஏர் இந்தியா விமானம் புறப்பட தயாரானது. விமானம் ஓடுபாதையில் சென்று கொண்டிருந்தபோது, இன்ஜினில் கோளாறு ஏற்பட்டதை விமானி அறிந்தார். உடனடியாக அவர் விமானத்தை ஓடுபாதையில் நிறுத்தி விட்டார்.

பின்னர் விமானத்தில் ஏற்பட்ட கோளாறை சரி செய்யும் பணியில் தொழில்நுட்ப நிபுணர்கள் ஈடுபட்டனர். ஆனால் விமானத்தில் கோளாறு சரிசெய்ய முடியவில்லை. இதனால் விமானம் ரத்து செய்யப்படுவதாக விமான நிறுவனம் அறிவித்தது. தற்போது விமானம் பழுது பார்க்கும் இடத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. விமானத்தின் இன்ஜினில் ஏற்பட்ட பிரச்னையை சரி செய்யும் பணியில் சிரமம் நீடிக்கிறது.

விமானம் திடீரென ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் கடும் அவதி அடைந்தனர். முன்னாள் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, ஆந்திரா வேளாண்மைத் துறை அமைச்சர் கின்ஜராபு அச்சனாயுடு ஆகியோர் பயணத்தை ரத்து செய்ய வேண்டியிருந்த அந்த விமானத்தின் பயணிகளில் அடங்குவர்.

இது குறித்து, ஏர் இந்தியாவின் செய்தித் தொடர்பாளர் கூறியதாவது: பயணிகளின் பாதுகாப்புக் கருதி, விஜயவாடாவிசாகப்பட்டினம் விமானம் புறப்படுவதற்கு முன்பு, தொழில்நுட்பக் கோளாறைக் கண்டறிந்த பிறகு ரத்து செய்யப்பட்டது.பயணிகளுக்கு ஹோட்டலில் தங்குமிடம் மற்றும் பணத்தை திரும்ப வழங்குதல் அல்லது மாற்று விமான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டது. பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு வருந்துகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.



# கார்த்திகை தீபத் திருவிழா: அனுமதித்த தனி நீதிபதியின் உத்தரவுக்கு இடைக்கால தடை

திண்டுக்கல், டிச.20-

திண்டுக்கல் மாவட்டம் பெருமாள்கோவில்பட்டி காளியம்மன் கோவில், கருப்பணசாமி கோவில் முன் கார்த்திகை தீபத் திருவிழா நடத்த அனுமதித்த, ஐகோர்ட் கிளை தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமி நாதன் உத்தரவுக்கு இரு நீதிபதிகள் அமர்வு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது.

திண்டுக்கல் மாவட்டம் பெருமாள் கோவில்பட்டியில் உள்ள கருப்பணசாமி கோவிலை மீண்டும் திறக்க வேண்டும். தினசரி பூஜைகளை நடத்த மக்களை அனுமதிக்க வேண்டும். கார்த்திகை தீபத் திருவிழா நடத்த அனுமதி வழங்க ஆத்துபர் தாசில்தாருக்கு உத்தரவிட வேண்டும் என ஐகோர்ட் மதுரைக்கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை டிச.2 ல் விசாரித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவு:

ஹிந்து, கிறிஸ்தவர்களுக்கு இடையிலான பிரச்னை தொடர்பாக போலீசார் பல்வேறு வழக்குகள் பதிவு செய்துள்ளனர். கிராமத்தில் பெரும்பான்மை சமூகமான கிறிஸ்தவர்களுக்கு குறிப்பிட்ட சர்வே எண்ணிற்குட்பட்ட நிலத்தில் எந்த உரிமையும் இல்லை. மனுவில் குறிப்பிட்டுள்ள இடங்களில் கார்த்திகை தீபத்திருவிழா நடத்த அனுமதிக்கப்படுகிறது என உத்தரவிட்டார்.

இதை எதிர்த்து திண்டுக்கல் ஆர். டி. ஓ. மற்றும் பெருமாள் கோவில் பட்டியைச் சேர்ந்த சபரிமுத்து தரப்பில் இரு நீதிபதிகள் அமர்வு முன் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த ஐகோர்ட் மதுரைக்கிளை இரு நீதிபதிகள் அமர்வு தனி நீதிபதியின் உத்தரவிற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டது.



# திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றாத விவகாரம்: தற்கொலை செய்த முருக பக்தர் உடலுக்கு அஞ்சலி

மதுரை, டிச.20-

திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றாத விவகாரத்தில், தற்கொலை செய்து கொண்ட முருக பக்தர் பூர்ண சந்திரன் உடலுக்கு, பா.ஜ., மாநில செயலாளர் ராம சீனிவாசன் அஞ்சலி செலுத்தினார்.

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்றக்கோரியும், தி.மு.க., அரசின் நிலைபாட்டை கண்டித்தும் மருந்து விற்பனை பிரதிநிதியான முருக பக்தர் பூர்ணசந்திரன் 40, மதுரை போலீஸ் அவுட்போஸ்ட் பூத்திற்குள் புகுந்து தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இவருக்கு மனைவி, மகன், மகள் உள்ளனர்.

அவரது உடலை மீட்ட போலீசார் மதுரை அரசு மருத்துமனைக்கு அனுப்பி வைத்தனர். தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன், தமிழக பாஜ முன்னாள் தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்தனர்.

பூர்ண சந்திரன் மரணத்துக்கு, பக்தர்கள், பொதுமக்கள், அரசியல் கட்சியினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு பா.ஜ., மாநில செயலாளர் ராம சீனிவாசன் வருகை தந்தார். அஞ்சலி செலுத்திய பிறகு கூறியதாவது:

பூர்ண சந்திரனின் மரணம் துரதிர்ஷ்டவசமானது. நேற்று முதல் இந்த துக்கம் தமிழர்களின் தொண்டையை அடைக்கிறது. தர்மத்திற்காக வாழ வேண்டுமே தவிர தர்மத்திற்காக இறக்கக்கூடாது. அதை பா.ஜ. ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது, என்றார்

# வங்கதேச வன்முறை எதிரொலி; ஊடக நிறுவனங்களை சேதப்படுத்தி போராட்டக்காரர்கள் அட்டூழியம்

டாக்கா, டிச.20-

வங்கதேசத்தில் மீண்டும் தலைதூக்கிய வன்முறையால் ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டன; 25 பத்திரிகையாளர்கள் மீட்கப்பட்டனர்.

வங்கதேசத்தில் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக போராட்டத்தை தூண்டிய எதிர்கட்சி தலைவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதைக் கண்டித்து அவரது ஆதரவாளர்கள் வன்முறையில் குதித்ததால் பதட்டமான சூழல் நிலவி வருகிறது. அந்தவகையில், போராட்டக்காரர்கள் 'டெய்லி ஸ்டார்' மற்றும் 'புரோத்தோம் அலி' உள்ளிட்ட பல வங்கதேச செய்தித்தாள்களின் அலுவலகங்களைத் தாக்கி சேதப்படுத்தினர்.

கர்வான் பஜார் பகுதியில் உள்ள பங்களாதேஷின் முன்னணி ஆங்கில மொழி நாளிதழான 'டெய்லி ஸ்டார்' அலுவலகம் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது, இதனால் பல பத்திரிகையாளர்கள் மற்றும் ஊழியர்கள் கட்டிடத்திற்குள் சிக்கிக் கொண்டனர். 'டெய்லி ஸ்டார்' பத்திரிகையாளரான சைமா இஸ்லாம், ''என்னால் இனி மூச்சுவிட முடியாது. அதிக புகை இருக்கிறது. நான் உள்ளே இருக்கிறேன். நீங்கள் என்னைக் கொல்கிறீர்கள்' என சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

'டெய்லி ஸ்டார்' அருகே உள்ள 'புரோத்தோம் அலோ' என்ற வங்காள மொழி நாளிதழின் அலுவலகமும் தாக்கப்பட்டது. போராட்டக்காரர்கள் கட்டடத்தை சேதப்படுத்தி, அதன் முன் தீ வைத்தனர், இதனால் பல பத்திரிகையாளர்கள் மற்றும் ஊழியர்கள் சிக்கிக் கொண்டனர். 'நூறுக்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் இரவு 11 மணியளவில் புரோத்தோம் அலோ அலுவலக கட்டடத்தை சுற்றி வளைத்து தாக்கி உள்ளனர்' என நேரில் கண்ட சாட்சி ஒருவர் தெரிவித்தார்.

# எந்த கட்சியுடன் கூட்டணி ஜனநாயக மக்கள் நீதி கழக தலைவர் சு.வேல்முருகன் அறிக்கை



சென்னை, டிச.20-

ஜனநாயக மக்கள் நீதி கழகத்தின் தலைவர் இன்று வெளியிட்ட அறிக்கையில் நடந்து முடிந்த 2024 பாராளுமன்ற தேர்தலில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் புரட்சித் தமிழர் எடப்பாடி திரு கே பழனிச்சாமி அவர்கள் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கூட்டணிக்கு ஆதரவளித்தோம். தற்போது 2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் எந்த கட்சியுடன் கூட்டணி என்பதை இந்த மாத இறுதியில் நடைபெறும் பொதுக்குழுவில் கலந்து ஆலோசனை செய்து அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு வரும் ஜனவரி மாதம் வெளியிடப்படும் என்பதை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



# சின்னாளப்பட்டியில் நெடுஞ்சாலைத்துறை சார்பாக ஆக்கிரமிப்புகள் அகற்றம் : பொது மக்கள் வரவேற்பு

சின்னாளபட்டி, டிச.20-

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் சின்னாளபட்டி பிரிவிலிருந்து கஸ்தூரிபா மருத்துவமனை பகுதி, பூஞ்சோலை, தேவாங்கர்பள்ளி சாலை, காமராஜர் சாலை, மற்றும் என்.சி.சி. சாலை பகுதியில் கடுமையான ஆக்கிரமிப்புகள் இருந்தன. இதனால் பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகள் ஆக்கிரமிப்பினால் தாமதமாக, பள்ளி வாகனங்களுக்கு வழிவிட முடியாத நிலை ஏற்பட்டது. இது குறித்து பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுக்கு புகார் மனுக்களை அனுப்பியிருந்தனர். நெடுஞ் ;சாலைத் துறையைச் சேர்ந்த உதவி கோட்ட பொறியாளர் அழகர்சாமி மற்றும் உதவி பொறியாளர் பரத் தலைமையில் சாலை ஆய்வாளர்கள் அருள்சாமி சீனிவாசன் மற்றும் சாலை பணியாளர்கள் பேரூராட்சி அலுவலர்கள் பணியாளர்கள் முன்னிலையில் காவல்துறை பாதுகாப்புடன் ஆக்கிரமிப்புகளை அகற்றினார்கள். ஆக்கிரமிப்பு செய்தால் அபராதம் விதிக்கப்படும் என்று எச்சரித்தனர். ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டதால் பொதுமக்கள் எவ்வித இடையூறும் இன்றி சாலையில் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.




# ரூ.5.50 கோடியில் தமிழக கேரள எல்லை குமுளியில் புதிய பேருந்து நிலையம் திறப்பு

தேனி டிச.20-

தேனி மாவட்டம் தமிழக கேரள எல்லை குமுளியில் ரூபாய் 5.50 கோடி மதிப்பில் புதிய பேருந்து நிலையத்தை அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, சிவசங்கர் திறந்து வைத்தனர். குமுளியில் கூடலூர் நகராட்சி குமுளியில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு புதிய பேருந்து நிலையம் அமைக்க பணிகள் தொடங்கப்பட்டு தற்போது முடிவுற்றது. இதற்கான திறப்பு விழா நேற்று நடைபெற்றது. ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் ஆகியோர் திறந்து வைத்தனர்.விழாவில் தேனி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ராமகிருஷ்ணன், ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் தெரியாதா மகாராஜன், மாவட்ட ஆட்சியர் ரஞ்சித் சிங், வருவாய் கோட்டாட்சியர் செய்யது முகமது மற்றும் தமிழ் நாடு அரசு போக்குவரத்து கழகம் மேலாண்மை இயக்குனர் சரவணன் மண்டல மேலாளர், கிளை மேலாளர், பேருந்து ஓட்டுநர், நடத்தினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# இலைக் கட்சியை 'கிரி' தம்பதி 'டிக்' செய்தது ஏன்? உள்குத்து உளவாளி



'கிரி, டிச.20-

"சொந்தக் கட்சிக்காரங்களே சூனியம் வெச்சுட்டாங்க" என்ற புலம்பலுடன் அண்மையில் மணாளனுடன் ஜோடியாக வந்து இலைக் கட்சியில் இடம்பிடித்த 'கிரி' மாவட்டத்தின் முன்னாள் சூரியக் கட்சி சேர்மன், மக்களவைத் தேர்தலிலேயே சீட்டுக்கு மோதினாராம். அது நடக்காததால் இம்முறை 'கிரி' தொகுதியில் சீட் கேட்கும் திட்டத்தில் இருந்தாராம்.

ஆனால், இவருக்கும் சூரியக் கட்சியின் மாவட்ட முதன்மைப் புள்ளிக்கும் ஆரம்பம் முதலே ஏழாம் பொருத்தமாம். வருங்கால அமைச்சர் கனவில் இருக்கும் மாவட்டப் புள்ளிக்கு 'சேர்மனின்' வளர்ச்சி சுத்தமாக ஜீரணிக்கவில்லையாம்.

இந்த நிலையில், 'பசைக்கு' பஞ்சமில்லாத வரான 'சேர்மனுக்கு' சீட் கிடைத்தால் கண்டிப்பாக வெற்றிபெற்று தனக்கே போட்டியாக வந்து நின்றாலும் நிற்பார் என்று கணக்குப் போட்டே 'சேர்மனை' பதவியை விட்டு இறக்கி, அவரை குடும்ப சகிதம் இலைக் கட்சியில் குடியேற வைத்துவிட்டாராம்.

முதலில், பனையூர் பக்கம் போகலாம் என்று தான் நினைத்தாராம் 'சேர்மன்'. ஆனால், அக்கம் பக்கத்தில் அவருக்கு யோசனை சொன்னவர்கள், "உங்களைப் பதவியை விட்டு இறக்கியவர்கள், நாளைக்கே ஏதாவது ஊழல் வழக்கைப் போட்டு குடைச்சல் கொடுத்தாலும் கொடுக்கலாம். அப்படி குடைந்தால் சமாளிக்க உங்களுக்கு இலைக் கட்சிதான் சரியான சாய்ஸ்" என்று சொல்லி ரூட்டை மாற்றிவிட்டார்களாம்.



# திருப்பூர் அவிநாசியில் விற்பனைக்காக கஞ்சா எடுத்துச் சென்ற 9 பேர் கைது கஞ்சா பறிமுதல்

திருப்பூர், டிச.20-

திருப்பூர் மாவட்டம் அவிநாசி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத விற்பனைக்காக கஞ்சா எடுத்துச் செல்வதாக கிடைத்த ரகசிய தகவலையடுத்து, 16.12.25 ஆம் தேதி அவிநாசி காவல் ஆய்வாளர் ராஜபிரபு மற்றும் காவலர்கள் ஷி .மேட்டுப்பாளையம்பாளையம் பகுதியில் வந்த வாகனங்களை சோதனை செய்த போது, காரில் சட்டவிரோத விற்பனைக்காக கஞ்சா எடுத்து வந்த திருப்பூர் அவினாசி பகுதியைச் சேர்ந்த 1.நவநீதகிருஷ்ணன்(23) 2.கார்த்திக்(27) 3.தினோத்(28) 4.கௌசிக்(28) 5.வெங்கடேஷ்(26) த 6.சங்கர்(26) 7.பாலாஜி(25) 8.கௌதம்(21), 9.பிரவின்(26), ஆகியோரை கைது செய்து, சுமார் 38 கிலோகிராம் எடையுள்ள கஞ்சா, 02 கார், மற்றும் 02 இருசக்கர வாகனம் ஆகியவற்றை கைப்பற்றி, வழக்குப்பதிவு செய்து, எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.



■ இனமான பேராசிரியர் அவர்களின் 103ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா முன்னிட்டு, இன்று திருப்பூர் மத்திய மாவட்ட திமுக செயலாளர் திருப்பூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் ரயில் நிலையம் முன்பு பேராசிரியர் திருவுருவ படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்திய போது.




■ மதுரை மாவட்டம் சோழவந்தானில் அதிமுக சார்பில், மாபெரும் திண்ணை பிரச்சாரம் மற்றும் துண்டு பிரசுரம் வழங்கும் விழா, முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையிலும், மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் வாடிப்பட்டி ராஜேஷ் கண்ணா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கருப்பையா, மாணிக்கம் மகேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் கொரியர் கணேசன், அரியூர் ராதாகிருஷ்ணன், நகர செயலாளர் முருகேசன் முன்னிலையிலும் நடைபெற்றது. இதில் சோழவந்தான் நிர்வாகி முருகேசன், மாவட்ட துணைச் செயலாளர் பஞ்சவர்ணம், மாவட்ட விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.பி.குமார் மற்றும் நெடுங்குளம் தங்கம் முருகன் உள்ளிட்ட அதிமுக மாநில மாவட்ட ஒன்றிய நகர கிளை கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல் மாவட்டத்தில் 3 லட்சத்து 24 ஆயிரம் (16.80%) வாக்காளர்கள் நீக்கம்



திண்டுக்கல், டிச,20-

சட்டமன்ற தொகுதியில் 60 ஆயிரத்து 493 வாக்காளர்கள், பழனி சட்டமன்றத் தொகுதியில் 52ஆயிரத்து 174 வாக்காளர்கள், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் 34 ஆயிரத்து 127 வாக்காளர்கள், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் 48 ஆயிரத்து 145 வாக்காளர்கள், நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் 41 ஆயிரத்து 850 வாக்காளர்கள், நத்தம் சட்டமன்ற தொகுதியில் 46 ஆயிரத்து 133 வாக்காளர்கள், வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதியில் 41 ஆயிரத்து 972 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 16.80 சதவீத வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். ஆக மொத்தம் திண்டுக்கல் மாவட்டத்தில் 3 லட்சத்து 24 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கம்.



■ கொங்குநாடு ஜனநாயக கழகத்தின் திருப்பூர் வடக்கு மாவட்ட அலுவலகம் திறப்பு விழா. கொங்கு நாடு ஜனநாயக கழக திருப்பூர் வடக்கு மாவட்ட புதிய அலுவலகம் திறப்பு விழா கட்சியின் மாநில பொதுச் செயலாளர் கொங்கு செ.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது. அலுவலகத்தை கொங்குநாடு ஜனநாயக கழக அவைத் தலைவர் இரா.முத்துசாமி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். மாநில பொருளாளர் எம்.ஆர்.குமார், திருப்பூர் மாவட்ட செய்தி தொடர்பாளர் விவேக்ராஜ், மாநில இளைஞர் அணிச் செயலாளர் நவீன் குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் கலைவாணர்நகரில் அமைந்துள்ள தர்ம சாஸ்தா ஐயப்பன் கோவிலில் மார்கழி மாத உற்சவ விழாவினை முன்னிட்டு ஐயப்பன் 18 படி கொண்ட சிம்ம வாகனத்தில் வீதி உலா வந்தார்.தொடர்ந்து பக்தர்கள் வானவேடிக்கை மேளதாளங்கள் முழங்க மலர் தூவி வரவேற்றனர். பக்தர்களுக்கு பூஜை பொருட்கள் வழங்கப்பட்டது. முன்னதாக, ஏ.எம்.எம். பள்ளி வளாகத்தில் காலை முதல் மாலை வரை கோவில் சார்பாக அன்னதானம் நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிஏ.எல். சீனிவாசன், மற்றும் ஐயப்ப முருக பக்தர்கள் செய்திருந்தனர்.



# SIR கரூர் மாவட்ட 4 தொகுதிகளில் 79,690 வாக்காளர்கள் நீக்கம்

கரூர், டிச,20-

கரூர் மாவட்டத்தில் 4 தொகுதிகளின் வரைவு வாக்காளர் பட்டியலில் 8,18,672 வாக்காளர்கள் உள்ளனர். 79,690 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் ஆட்சியர் மீ.தங்கவேல் வாக்காளர் பட்டியலை இன்று வெளியிட்டார்.

அதன் விவரம்: கரூர் மாவட்டத்தில் கடந்த அக்.27ம் தேதி கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம் (தனி), குளித்தலை ஆகிய 4 சட்டப்பேரவைத் தொகுதிகளில் கரூரில் ஆண்கள் 1,13,285, பெண்கள் 1,27,517, இதரர் 46 என மொத்தம் 2,40,848 வாக்காளர்கள், அரவக்குறிச்சியில் ஆண்கள் 1,00,773, பெண்கள் 1,11,295, இதரர் 4 என மொத்தம் 2,12,072 வாக்காளர்கள், கிருஷ்ணராயபுரம் (தனி) தொகுதியில் ஆண்கள் 1,03,886, பெண்கள் 1,10,063, இதரர் 34 என மொத்தம் 2,13,983 வாக்காளர்கள், குளித்தலையில் ஆண்கள் 1,12,574, பெண்கள் 1,18,873, இதரர் 7 என மொத்தம் 2,31,459 வாக்காளர்கள் உள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் 4 தொகுதிகளில் ஆண்கள் 4,30,518, பெண்கள் 4,67,753, இதரர் 91 என மொத்தம் 8,98362 வாக்காளர்கள் இருந்தனர். கடந்த நவ.4ம் தேதி முதல் சிறப்பு தீவிர திருத்தத்தின்போது அனைவருக்கும் கணக்கீட்டு படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டு பெறப்பட்ட படிவங்கள் அடிப்படையில் வரைவு வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது. இதில், முகவரியில் இல்லாதவர்கள் 9,844, குடியிருப்பு மாறியவர்கள் 43,576, இறந்தவர்கள் 23,829, இரட்டைப் பதிவு 2,295, பிற 146 என மொத்தம் 79,690 பேர் நீக்கப்பட்டுள்ளனர்



# தமிழகத்தில் டிச.24 வரை வறண்ட வானிலை நிலவும்; நாமக்கல்லில் 16.3 டிகிரி செல்சியஸ் குளிர் பதிவு

சென்னை, டிச.20-

தமிழகத்தில் நாளை முதல் 24ம் தேதி வரை வறண்ட வானிலை நிலவக்கூடும். நாமக்கல்லில் 16.3 டிகிரி செல்சியஸ் குளிர் பதிவாகியுள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் 24ம் தேதி வரை வறண்ட வானிலை நிலவக்கூடும். தமிழகம் நோக்கி வீசும் கிழக்கு திசை காற்றில் ஏற்பட்டுள்ள வேகமாறுபாடு காரணமாக டிச.25 ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் 23ம் தேதி வரை குறைந்தபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 4 டிகிரி செல்சியஸ் வரை குறைவாக இருக்கக்கூடும். நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் நாளை இரவு அல்லது அதிகாலை வேளையில் உறைபனி ஏற்பட வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். குறைந்தபட்ச வெப்பநிலை 21 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.

இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான குறைந்தபட்ச வெப்பநிலை (குளிர்) அளவுகளின்படி அதிகபட்சமாக மலைப் பகுதிகளில் ஊட்டியில் 8 டிகிரி, குன்னூர், கொடைக்கானலில் 9 டிகிரி செல்சியஸ், சமவெளி பகுதிகளில் அதிகபட்சமாக நாமக்கல்லில் 16.3 டிகிரி, வேலூர் விரிஞ்சிபுரம் 16.5, தருமபுரியில் 16.6 டிகிரி, சென்னையில் நுங்கம்பாக்கத்தில் 22 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000